மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.61/2020</u>

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 10ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காசிநாதன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>10.07.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என் தகப்பனார் பெயர் சிவாச்சலம் செட்டியார் என் தகப்பனாரின் தகப்பனார் பெயர் அண்ணாமலை செட்டியார். 01.04.1934 தேதியில் அண்ணாமலை செட்டியார் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை அண்ணாமலை செட்டியார் கிரையம் பெறுவதற்கு முன்பாக தாவா சொத்துக்களின் வடபுறம் உள்ள சொத்துக்கள் ஒரு கணபதி பண்டாரம் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் கணபதி பண்டாரம் என்பவருக்கு 1927 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியமா என்றால் ஆமாம்.

2. என்னுடைய பாட்டனார் கிரயம் பெற்ற சொத்துகளுக்கு கிழபுறமும் மேல்புறமும் தென்வடல் சாலை உள்ளது என்றால் சரிதான். வடபுறம் கணபதி பண்டாரம் என்பவருக்கு பாத்தியப்பட்டது தென்புறம் சாலை உள்ளது. என் பாட்டனார் கிரயம் பெற்ற சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1934 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 17 சென்ட்

நிலத்தை அவர் கிரயம் பெற்றார். அந்த 17 செண்ட் நிலத்தைப் பொறுத்து நானும் செந்தில்குமாரும் பாகம் செய்து கொண்டோமா என்றால் 2014 ஆம் ஆண்டு பாகம் செய்து கொண்டோம் எங்களுக்கு அனுபவத்தின் அடிப்படையில் 18–1/2 செண்ட் அங்கு பாத்தியப்பட்டிருந்தது. என் பாட்டனார் கிரயம் பெற்ற ஆவணத்தில் 17 செண்ட் என்று கண்டுள்ள நிலையில் மீதமுள்ள 1–1/2 செண்ட் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் 1934 ஆம் ஆண்டு என் தாத்தா கட்டடங்கள் கட்டி அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் பாத்தியம். அந்த 1–1/2 செண்ட் நிலம் யாருக்கு பாத்தியம் என்றால் நத்தம் ரிசர்வே பட்டாவில் எங்களுக்கு 18 –1/2 செண்டிற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. என் பாட்டனார் கிரயம் பெற்ற சொத்திற்கு அருகில் புறம்போக்கு நிலம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. வழக்குரையில் தாவா சொத்து விபரத்தில் தாவா சொத்தின் வடபுற செக்குபந்தியாக 3ம் நபருக்கு பாத்தியப்பட்ட நிலம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறு.

3. 1934 கிரைய ஆவணத்திலேயே தாவா சொத்தின் வடபுறம் கணபதி பண்டாரத்திற்கு பாத்தியப்பட்ட வீடு மற்றும் காலியிடம் என்று கண்டு என் பாட்டனார் கிரயம் பெற்றுள்ளார் என்றால் அதை பத்திரத்தை பார்த்து தான் சொல்ல முடியும். சாட்சி வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு கணபதி பண்டாரம் இடத்திற்கு தெற்கு என செக்கு பகுதி கண்டுள்ளதாக சொல்கிறார்.

4. வா.சா.ஆ.1 ஆவணமான 1934 கிரைய ஆவணத்தில் கிரைய சொத்திற்கு நீள அகலங்கள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரய ஆவணத்தில் கிரைய சொத்தில் மொத்த விஸ்தீரணமும் சொல்லப்படவில்லை என்றால் 17 செண்ட் என்று சொல்லி உள்ளார்கள். இடைக்கால உறுத்து கட்டளை கேட்டு நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த மனு இந்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான்.

மூல ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் ஜெராக்ஸ் நகலை தாக்கல் செய்ததால் அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வா.சா.ஆ.1 ஆவண நகலை நான் கையில் வைத்திருந்தேன் என்றால் சரிதான். ஏன் வழக்கு தாக்கல் செய்தபோது சான்றிட்ட நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அந்த ஆவணம் தேவைப்படுவதால் நான் அதை என்னிடம் வைத்திருந்தேன் ரிசர்வே பட்டாவில் கண்டுள்ள விஸ்திரணம் 1934 கிரைய ஆவணத்திற்கு விரோதமாக ஆக உள்ளது என்றால் சரியல்ல.

5. எனது அனுபவத்தில் உள்ள சொத்தை பொருத்து எனக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. பிரதிவாதியின் தகப்பனார் பெயர் சச்சிதானந்தம் அவரை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது சொத்தை நான் அளவீடு செய்து பார்த்தேனா என்றால் ஆமாம். எந்த வருடம் அளவீடு செய்தேன் என்றால் 2014 ஆம் ஆண்டு. அளவீடு செய்த போது 1934 ஆண்டு கிரைய ஆவணத்திற்கு அதிகமாக என் வசம் சொத்துக்கள் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் பட்டா படி எனக்கு அதில் பாத்தியம் உள்ளது.

6. 1985 ஆம் ஆண்டு எனக்கு வழங்கப்பட்ட ரிசர்வே பட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை மேற்படி பட்டாவின் நகலை 2020 இல் பெற்று தாக்கல் செய்துள்ளேன். அசல் பட்டா எங்கே என்றால் என் வசம் தான் இருக்கும்அது எங்கே உள்ளது என்று தெரியவில்லை. 1985 ஆம் ஆண்டு எங்களுக்கு வழங்கப்பட்ட ரீ சர்வே பட்டாவின் அடிப்படையில் தான் நானும் செந்தில்குமாரும் பாகம் செய்து கொண்டோமா என்றால் பட்டாவின் அடிப்படையிலும் அனுபவத்தின் அடிப்படையிலும் பாகம் செய்து கொண்டோம். யார் சொத்தை நாங்கள் அனுபவம் செய்து வந்ததாக சொல்கிறேன் என்றால் எங்கள் பாட்டனார் கிரையம் பெற்ற சொத்தை நாங்கள் அனுபவம் செய்து வந்தோம்.

7. யாருக்கு எதிராக நாங்கள் அனுபவ பாத்தியம் கேட்கிறோம் என்றால் என் பாட்டனார் கிரையம் பெற்ற சொத்தை நாங்கள் அனுபவம் செய்து வந்தோம் தாவா சொத்து எங்களுக்கு 1934 கிரைய ஆவணத்தின் படியும் 1985 இல் அனுபவத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையிலும் பாத்தியப்பட்டது என்று இந்த வழக்கில் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் ஏதேனும் கேட்டுள்ளேன் என்றால் இல்லை ஏன் நான் இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் எனது சொத்து அதனால் விளம்புகை பரிகாரம் நான் கேட்கவில்லை என் பாட்டனார் பெற்ற கிரைய ஆவணத்திற்கும் எங்களுக்கு வழங்கப்பட்ட பட்டாவிற்கும் இடையே ஒன்றரை சென்ட் விஸ்தீரணம் உள்ள பூமி வித்தியாசம் உள்ளதால் இந்த வழக்கை நான் விளம்புகை பரிகாரம் கேட்டு தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் தாவா சொத்தை பொறுத்து நான் கூறியுள்ள நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

8. 04.06.2022, 07.06.2022 ஆகிய தேதிகளில் இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் மீது நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான் பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி நான் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம் .அந்த மனு என்ன ஆனது என்றால் உரிமை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் அங்கு சென்று பார்த்துக்கொள்ள சொல்லி தள்ளுபடி செய்து விட்டார்கள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு நான் ஆஜராகாததால் தான் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் நான் ஆஜராகவில்லை எனக்கு பதிலாக என் வழக்கறிஞர் ஆஜர் ஆனார். நான் சொல்வது உண்மை அல்ல என்று நான் உயர் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்த மனுவானது எனது வருகையின்மையின் காரணமாக என் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்று சொன்னால் சரியல்ல.

(மேற்கொண்டு ஆவணங்கள் பார்வையிட வேண்டும் என்ற பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.07.10 19:01:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்